இருக்கிறார்கள். அவர்கள் அந்த இடத்திலே இருங்கள், உங்களுக்கே நாங்கள் பட்டா வாங்கித் தருகிறோம் என்று சிலர் தூண்டிவிட்டு அந்தத் தகராறை எழுப்பினார்கள். ஆனால் யார் யாருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டதோ அவர்கள் எல்லாம் நல்ல இடத்திலே அவர்களை அமர்த்திவிட்டு, இப்போது அந்த இடத்தை சுத்தமாக, காலியாக எப்படியிருக்கவேண்டுமோ அப்படி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லேண்ட் கிராபர்ஸ் என்று சொன்னார்கள். நாங்கள் அமைச்சர் அவர்கள் இடத்தில் கொடுத்திருக்கிற அந்த மகஜரில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இந்திரா காங்கிரசார், திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஜனதா, கம்யூனிஸ்ட் போன்ற எல்லோரும் கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் எல்லாம் லேண்ட் கிராபர்ஸ் அல்ல. ஒன்று. ஆனால், நீதிமன்றத்திலே, ஏற்கெனவே அங்கு மனு கொ க்கப்பட்டிருக்கிறது, வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மறைந்த ஜி. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இங்கே சபாநாயகராக இருக்கும்போதே 35 ஆண்டுக் காலமாக அந்த இடத்திலே குடியிருப்பவர்களை காலி செய்யக் கூடாது. ஏறத்தாழ 30 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே ரெவின்யூ போர்டிலே ஒரு ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நீதிமன்றத்திலே ஒரு அட்வகேட் கமிஷன் நியமிக்கப்பட்டு—குடிசை மாற்று வாரியம் செய்த கொடுமைகளைப்பற்றி இன்றைக்கு பட்டியல் போட்டு நீதிமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள். குடிசை மாற்று வாரியத்தில் இருப்பவர்கள் தவறே செய்யவில்லை என்று வைத்துக்கொண்டாலும்கூட இப்படிப்பட்ட பொருள் நட்டங்களுக்கும், இப்படிப்பட்ட கொடுமைகளுக்கும் அந்த அரசாங்கம் என்ன பரிகாரம் செய்யப்போகிறது, என்ன நட்ட ஈடு கொடுக்கப்போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நல்ல செய்தி. நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சனை சென்றுவிட்டதால் யார் பக்கம் நீதி இருக்கிறது என்பதை அங்கே பார்த்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.